## வேலூர் மாவட்டம், ஸ்ரீநாராயணி பீடத்தின் சார்பில்,

# 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தலா ரூ.5,000 நிதியுதவி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

வேலூர், நவ. 6 -

**வேலூர் மாவட்டம், ஸ்ரீநாராயணி பீடத்தின் சார்பில், நடந்த நிகழ்ச்சியில் 500 நலிவுற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தலா ரூ.5,000 நிதியுதவியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

**அப்போது அவர், ``ஏழை எளிய மக்களுக்குத் தொடர்ந்து உதவிக்கரம் நீட்டிவரும் ஸ்ரீநாராயணி பீடத்தின் சமுதாய பணிகள் தொடரட்டும்” என வாழ்த்துரை வழங்கினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

ஸ்ரீ சக்தி நாராயணி பீடம் சார்பில், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதி உதவி மற்றும் சான்றிதழ்கள் வழங்குகிற இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மையம், ஆன்மிகத்தளமாக மட்டும் இல்லாமல், சமூக முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்கின்ற இடமாகவும் திகழ்ந்துகொண்டு இருக்கிறது. என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கும்போது நான் வருவேனா, மாட்டேனா என்ற சந்தேகத்துடன் தான் அழைத்தார்கள்.

அண்ணன் நந்தகுமார் அவர்கள் குறிப்பிட்டு சொன்னார். `ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்கிறார்கள், அதனால், நீங்கள் வந்தால் நன்றாக இருக்கும்’ என்று சொன்னார். அதனால், `நிச்சயம் நான் வருகிறேன்’ என்று சொல்லி, அந்த உணர்வுடன் இங்கு வருகை தந்துள்ளேன். இந்த மையத்துக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வந்து இருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்து இருக்கிறார்கள். அவர்கள் எந்த உணர்வுடன் வந்தார்களோ, அதே உணர்வோடு தான் இங்கு வந்துள்ளேன் என்பதை நினைக்கும்போது, மிகவும் பெருமையாக இருக்கிறது.

### ஆன்மிகம்-சுற்றுலா

இந்த மையத்தின் பொற்கோயிலுக்கு, தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். இது இந்த மாவட்டத்தின் ஆன்மிக வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கிக்கொண்டு இருக்கிறது.

இந்த மையம் மூலமாக, குழந்தைகளுக்கு மருத்துவ உதவி, பெண்களுக்கு நிதி உதவி, திருமண உதவி என்று பல உதவிகளை, பல ஆண்டுகளாக எந்தவித எதிர்பார்ப்புமின்றி இவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு வருகை தருவதற்கு முன்பு அதிநவீன சி.டி ஸ்கேன் மையத்தைத் திறந்து வைத்துவிட்டுத்தான் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ளேன். அதற்கும் என்னை அழைத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### 5,000 ரூபாய் நிதி உதவி

அதைத் தொடர்ந்து இப்போது நாட்டுப்புறக் கலைஞர்கள் 500 பேருக்கு தலா 5,000 ரூபாய் நிதிஉதவியை அவர்கள் வழங்க இருக்கிறார்கள். இது மாதிரியான உதவிகளை எல்லாம் அரசாங்கம் செய்வது எளிது. ஆனால், ஒரு தனியார் அமைப்பு செய்வது சவாலானது.

இன்றைக்கு இங்கு இவ்வளவு நாட்டுப்புறக் கலைஞர்களை ஒரே இடத்தில் சந்திப்பது எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. ஏனென்றால், சினிமா எல்லாம் வருவதற்கு முன்பு, உழைக்கும் மக்கள் மத்தியில் கலைகளை பரப்பியவர்கள் நாட்டுப்புறக் கலைஞர்கள் நீங்கள்தான்.

நாட்டுப்புறக் கலைஞர்கள்தான் நம் பண்பாட்டு அடையாளமாக இன்று வரை திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களின் கலைகளில் பல வரலாற்றுத் தகவல்கள் என்றைக்கும் இருக்கும்.

இந்த நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்க, நம் தமிழ்நாடு அரசு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் மூலம் நாட்டுப்புற கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

இன்றைக்கு அரசோடு சேர்ந்து, இந்த மையமும் உங்களுக்கு உதவி செய்கிறது. இந்த உதவிகள் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிச்சயம் பேருதவியாக இருக்கும்.

### கட்டணமில்லா அறுவை சிகிச்சை

1995ஆம் ஆண்டிலேயே இந்த மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கணக்கான பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை, இந்த அறக்கட்டளை மூலமாக செய்து கொடுத்திருக்கிறார்கள். உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டரை கோடி ரூபாய் அளவுக்கு கல்வி உதவித்தொகையையும் இந்த மையம் கொடுத்து வருகிறது. இவ்வற்றையெல்லாம் விட முக்கியமாக, 2008ஆம் ஆண்டு 320 குழந்தைகளுக்கு இலவச இருதய அறுவை சிகிச்சை செய்து அந்த பிஞ்சு உயிர்களைக் காப்பாற்றிய மையம்தான் இந்த மையம்.

கட்டணமில்லா அறுவை சிகிச்சை செய்ய இந்த மையம் சார்பில், நிதி உதவி கொடுத்த நிகழ்ச்சியில், அன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டார்கள். அப்போது, பொற்கோயிலைக் குறிப்பிட்டு பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ``திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகம் கூட ஆலயம்தான். அதன் பெயர் அண்ணா அறிவாலயம்” என்று குறிப்பிட்டுப் பேசினார்.

### சக்தி நாராயணி பீடம்

ஆன்மிகப் பணி செய்வதாக சொல்லும் பலர், அறிவியலுக்கு எதிரான கருத்துகளை சில சமயம் பரப்புவார்கள். ஆனால், இந்த சக்தி நாராயணி பீடம் அறிவியலையும் அரவணைத்துக் கொண்டு, பல்வேறு பணிகளை செய்வது உண்மையிலேயே நாம் அனைவரும் பாராட்டக்கூடிய ஒரு விஷயம்.

இந்த மையத்தின் மக்கள் சேவையும், சமுதாயப் பணிகளும் இதேபோல் மென்மேலும் தொடர வேண்டும். இதேபோல் பல நிகழ்ச்சிகள் அவர்கள் நடத்த வேண்டும். என்னால் எந்த அளவுக்கு முடியுமோ நானும் அந்த அளவு கலந்து கொள்வேன் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

நிதி உதவி பெற்ற அத்தனை நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீபுரம் ஸ்ரீசக்தி நாராயணி பீடத்தின் பீடாதிபதி சக்தி அம்மா, நாராயணி மருத்துவமனையின் இயக்குநர் பாலாஜி, பொற்கோயிலின் இயக்குநர் சுரேஷ்பாபு, அறங்காவலர் சௌந்தர்ராஜன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மனோஜ் பாண்டியன் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2025) துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு உள்ளார்.

---

## முத்தமிழறிஞர் கலைஞர் மீதும் — கழகத் தலைவர் மீதும் பெரும் பற்றுக் கொண்டிருந்தவர்!

# மக்கள் பணியிலும் - கழகப் பணியிலும் சிறந்து விளங்கியவர், மேடவாக்கம் ரவி!

## திருவுருவப் படத்தை திறந்து வைத்து — துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை,நவ. 6 -

**சென்னை மேடவாக்கத்தில் கழகத்தின் ஆற்றல்மிகு செயல்வீரர் மறைந்த மேடவாக்கம் ப.ரவி அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று - அவரது திருவுருவப் படத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசினார்.**

**அப்போது அவர், ``முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் - கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்கள் மீதும் மேடவாக்கம் ப.ரவி பெரும்பற்று கொண்டிருந்தவர். பரங்கிமலை ஒன்றியக் கழகச் செயலாளர் - மேடவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் - ஒன்றிய கவுன்சிலர் - கழக பொதுக்குழு உறுப்பினர் என மக்கள் பணியிலும் - கழகப் பணியிலும் சிறந்து விளங்கியவர் அண்ணன் ரவி அவர்கள். அவரது மறைவு, கழகத்திற்கு பேரிழப்பு” என்று உரையாற்றினார்.**

**இதுகுறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உரை வருமாறு:**

கழகத்தின் ஆற்றல்மிகு செயல்வீரர் மறைந்த மேடவாக்கம் ரவி அவர்களின் திருவுருவப் படத்தை இன்றைக்கு நாம் இங்கு திறந்து வைத்திருக்கிறோம். ரவி அவர்களைப் பற்றி குறிப்பிட்டு சொல்லவேண்டுமென்றால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஓர் உண்மையான மிகத் தூய்மையான ஓர் உடன்பிறப்பு என்றுகூட சொல்லலாம்.

கழகத் தலைவர் அவர்களின் பாசத்துக்கும், அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்தான் ரவி அவர்கள். எப்படி கலைஞர் மீது பாசம் வைத்திருந்தாரோ, தலைவர் மீது பாசம் வைத்திருந்தாரோ அதேபோல என் மீதும் எப்பொழுதும் தனிப்பட்ட முறையில் தனி அன்பை செலுத்தியவர் அண்ணன் ரவி அவர்கள்.

### ஊராட்சி மன்றத் தலைவர்

தன்னுடைய 20-வது வயதில் பரங்கிமலை ஒன்றிய பிரதிநிதியாக கழகப் பணியைத் தொடங்கியவர் அண்ணன் ரவி அவர்கள். 1990-ஆம் ஆண்டு மேடவாக்கம் நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று, சிறப்பாக மக்கள் பணியாற்றியவர். குறிப்பாக, 2001-ஆம் ஆண்டு முதல் 2016-ஆம் ஆண்டு வரை மூன்று முறை மேடவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராக மிகச் சிறப்பாக மக்கள் பணியாற்றினார்.



திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள்தான் கழகத்தின் ஆணிவேர் என்று கலைஞர் சொல்வார். அந்த வகையில், சென்னை தெற்கு மாவட்டம், பரங்கிமலை ஒன்றிய கழகச் செயலாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றி, இந்தப் பகுதியில் நம்முடைய இயக்கம் வலுவான அடித்தளம் அமைவதற்கு காரணமாக இருந்தவர்தான் அண்ணன் ரவி அவர்கள்.

ஒன்றிய கவுன்சிலராகவும் மிகச்சிறப்பாக செயல்பட்டு மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றவர். மக்கள் பணி, இயக்கப் பணி இரண்டிலும் இங்கே இருக்கக்கூடிய கழக நிர்வாகிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு ரோல் மாடலாக தன்னுடைய பணிகளில் அவர் சிறந்து விளங்கியவர்.

### நலத்திட்ட உதவிகள்

கொரோனா பேரிடர் காலமாக இருந்தாலும் சரி, மழை வெள்ளம் போன்ற இக்கட்டான நேரங்களிலும் சரி, எப்போதுமே மக்களுடன் மக்களாக இருந்து களப்பணி ஆற்றியவர் அண்ணன் ரவி அவர்கள். இந்தப் பகுதியில் பேருந்து நிலையம், பள்ளிக்கூட குழந்தைகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை, கழகம் சார்பாகவும், அரசு சார்பாகவும் எண்ணற்ற முறையில் அவர் வழங்கி இருக்கின்றார்.

அதேபோல் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்தப் பகுதியில் ஒரு பக்கபலமாக இருந்து, மேடவாக்கம் என்றாலே அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்ற நிலையை உருவாக்கி வைத்திருக்கிறார். இன்றைக்கு அவர் மறைந்திருந்தாலும், அவருக்கு நான் இளைஞர் அணிச் செயலாளராக தனிப்பட்ட முறையில் அவருக்கு என்னுடைய நன்றியை சொல்ல வேண்டும். அதற்கு காரணம், அவர் நம்மை விட்டு பிரிந்திருந்தாலும், அவர் வழியில், அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வதற்கு, இன்றைக்கு அவரது மகன் தம்பி லோகேஷை, இந்த இயக்கத்துக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதுபோல தம்பி லோகேஷ் அவர்களை இன்னாரின் மகன் என்பதற்காக ஒன்றிய துணை அமைப்பாளர் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. அவரின் மக்கள் பணி, அதில் இருந்த ஈடுபாடு, இவற்றையெல்லாம் பார்த்து அவருக்கு இந்தப் பொறுப்பை நம்முடைய தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

### அயராத உழைப்பு

இன்றைக்கு ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக மிகச் சிறப்பாக கழகப்பணியை ஆற்றி வருகிறார். அண்ணன் ரவி அவர்கள் பொதுவாழ்வில் நிச்சயமாக இன்னும் பல உயரங்களைத் தொட்டிருக்க வேண்டும். ஆனால், இயற்கை அவரை நம்மிடம் இருந்து எடுத்து சென்று விட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார். இயக்கம் நமக்கு என்ன செய்தது என்பதை எதிர்பார்த்து உழைப்பவர்களைவிட, இந்த இயக்கத்துக்காக நாம் என்ன செய்தோம் என்று உழைப்பவர்களே உண்மையான உடன்பிறப்புகள் என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அந்த வகையில், தன் வாழ்நாள் முழுவதும் இந்த இயக்கத்துக்காக உழைத்தவர்தான் அண்ணன் மேடவாக்கம் ரவி அவர்கள்.

அண்ணன் ரவி அவர்களின் மறைவு, அவரின் குடும்பத்துக்கு மட்டுமல்ல, இந்தப் பகுதிக்கு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கத்துக்கும் இது ஒரு மிகப்பெரிய இழப்பு. இந்த நேரத்தில் அண்ணன் ரவி அவர்களின் துணைவியார் மேடவாக்கம் நகராட்சி மன்றத் தலைவர் அக்கா சிவபூஷணம் ரவி மற்றும் தம்பி லோகேஷ் உள்ளிட்ட அவரின் குடும்பத்தாருக்கு என் ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் ரவி அவர்கள் உடலால் மறைந்திருந்தாலும், அவரின் பணிகள் கழகத்தின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும். அண்ணன் ரவி அவர்களின் புகழ் என்றென்றும் ஓங்கட்டும் என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் பேசினார்.

இதைத் தொடர்ந்து மேடவாக்கம் ப.ரவி அவர்களை இழந்து வாடும் அவரது துணைவியார் சிவபூஷணம் ரவி அவர்களுக்கும், மகனும் - ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளருமான தம்பி லோகேஷ் உட்பட அவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதலையும் தெரிவித்தார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, பிரபாகர் ராஜா, தாம்பரம் மாநகர துணை மேயர் காமராஜ், மாவட்ட அவைத் தலைவர் சைதை குணசேகரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் விஸ்வநாதன், மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் சோமு, மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் மதியழகன், ரவிச்சந்திரன், நொளம்பூர் ராஜன், வே.ஆனந்தம், ஒன்றியச் செயலாளர் வீரமணி, ஒன்றிய கழகச் செயலாளர் வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளர்கள் எழில்பாண்டியன், தியாகராஜன், பொதுக்குழு உறுப்பினர் ஹரி, ஒன்றியக்குழு தலைவர் சங்கீதா பாரதிராஜா, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சதீஷ், ஊராட்சி மன்றத் தலைவர் சிவபூஷணம் ரவி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் லோகேஷ்வரா உள்பட பலரும் கலந்துகொண்டனர்.